1982 மார்ச் 18]

திரு. க. இரா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாலை நேரக் காட்சி, பகல் 10 மணி காட்சி என்று சினிமாக் கொட்டகைகளுக்கு அனுமதி கொடுக்கப்படுகிறது. மாணவர்கள் நலனைக்கருதி, காலையிலே பள்ளிக்கூடம்செல்லாமல் 10 மணி காட்சிக்கு அவர்கள் சென்றுவிடுகிற நிலை இருப்பதால் 10 மணி காட்சி காட்டுவதை அரசு ரத்து செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகல் காட்சி காட்ட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் கேள்வி கேட்கிறார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அதற்கு மாறாக அனுமதிக்கப்பட்டிருக்கிற காட்சியை ரத்துசெய்ய வேண்டுமென்று கேட்கிறார்கள். கெட்டுப் போகிற மாணவர்கள் பகல் காட்சி நடத்தினாலும், நடத்தா விட்டாலும் கெட்டுப் போவார்கள். காட்சி நடத்துவதாலே மாணவர்கள் கெட்டுப் போவார்கள் என்கிற வாதம் ஏற்றுக் கொள்வதற்கில்லை.

வெள்ளைப்பொன்னி நெல் விதை வழங்கும் செயற்குறிப்பு.

*வினா எண் 535—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழகத்தில் விவசாயிகளுக்கு வெள்ளைப் பொன்னி நெல்விதை வழங்கப்படுகிறதா?

(ஆ) இல்லை எனில் அரசு வழங்க முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) தமிழகத்தில் விவசாயி களுக்கு வெள்ளைப் பொன்னி நெல்விதை வேளாண்மைத்துறை யால் தற்போது வழங்கப்படவில்லை.

(ஆ) வெள்ளைப் பொன்னி நெல் விதைகளை விவசாயி களுக்கு வழங்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளைப் பொன்னி மிக சிறந்த நெல் என்று சொல்கிறார்கள். மாநில வேளாண்மைத் துறையின் மூலமாக நாம் கொடுத்து வருகிற விதை நெல்லைப் போல 50 சதவீதம் கூடுதலாக விளைச்சல் தருகிறது என்றும், அந்த நெல்லுக்கு நோயே வருவதில்லை என்றும்சொல்கிறார்கள். சிங்கப்பூரிலேயிருந்து அந்த நெல்லை கடத்தி வந்து திருச்சி பகுதியிலே பயிரிட்டுக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும்கூட இரண்டு போகத்திற்கு பிறகு வீரியம் இல்லாமல் போய்விடுகிறது. உற்பத்தியைப் பெருக்குவதற்கு உதவி செய்கிற இந்த நெல்லை வேளாண்மைத்துறையிலே புகுத்தி விவசாயிகளுக்குக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிற கருத்துக்களின் அடிப்படையிலே அரசு இதை ஆராயும்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது வீரியம் மிக்கது என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். திருச்சி தென்னாற்காடு மாவட்டங்களிலே கொடுக்கப்பட்ட வெள்ளைப் பொன்னி சரியானதாக கொடுக்கப் படாததால் விவசாயிகளுக்கு 75 சதவீதம் பாதிப்பு ஏற்பட்டு உள்ளதனை அரசிற்கு தெரிவித்திருப்பது உண்மைதானா? அப்படி பாதிக்கப்பட்டவர்களுக்கு வருங்காலத்திலாவது நல்ல நெல்லாக கொடுப்பதற்கும், அதற்காக ரிசர்ச் ஸ்டேஷனுக்கு அனுப்பி ஆராய்ந்து பிறகு விவசாயிகளுக்கு அதனை கொடுப்பதற்கும் அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளைப் பொன்னி ரகத்தை இது வரையில் அரசு வழங்கவில்லை. இந்தத் துறையும் வழங்கவில்லை. அவர்கள் தெரிவிக்கிற கருத்துக்கள் அடிப்படையிலே இனிமேல் இதுபற்றி ஆராய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்றுதான் நான் தெரிவித்தேன்.

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு அளிக்கப்படுகிற விதை நெல் சரியான நேரத்தில் கொடுப்பதில்லை. ஆகவே இதைத் தவிர்க்க அரசு விதை நெல்லை முன்னதாக வழங்க முன் வருமா? அதை மானிய விலையில் வழங்குவதற்கு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கு தொடர்பில்லை. ஆனால் விதை நெல் சரியாக வழங்கப்படவில்லை என்று புகார் வந்தால் அரசு உரிய வகையிலே ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கும்.

திரு. ரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, வெள்ளைப் பொன்னி தஞ்சை மாவட்டத்தில் அதிகம் பயிரிடப் படுகிறது. அதனால் விவசாய இலாக்கா மூலமாக தரமான விதை தருவதற்கு அரசு முன்வருமா? அதிக மகசூல் பெறுவதற்கு ஆராய்ச்சி நடத்தி தமிழகம் முழுவதும் பயிரிட முயற்சிகள் அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1982 மார்ச் 18]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னாலே அப்படி வெள்ளைப் பொன்னி விதை நெல் வழங்குகிற வகையிலே அரசு முயற்சி மேற்கொள்ளவில்லை. வழங்க வேண்டுமென்றால் அதற்கென்று சில விதிமுறைகள் இருத்கின்றன வேளாண் பல்கலைக்கழகத்தின் அறிஞர்கள் அதை ஏற்றிருக்க வேண்டும், இந்திய அரசு திட்டப்படி விதைச் சான்று அளித்திருக்க வேண்டும். இதை மத்திய அரசு அறிவிக்க செய்திருக்க வேண்டும் என்று இப்படி சில விதிமுறைகள் இருக்கின்றன. இந்த விதிமுறைகளுக்கு உட்பட்டதாக வெள்ளைப் பொன்னி ரகம் இதுவரையிலும் சேர்க்கப்பட்வில்லை. இனிமேல் சேர்ப்பதற்கு அரசு ஆராயும்.

(முற்பகல் 9.30)

திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக வெள்ளைப்பொன்னி கொடுக்கப்படுகிறது என்று அமைச்சர் சொன்னார். ஆனால், இங்கே குறிப்பிட்டதைப் போல், தென்னாற்காடு மாவட்டத்தில் நிறைய பேர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், மகசூல் சரியில்லை. எனவே, அவற்றுக்கு மாற்று நெல்லாக, புதிய ரக நெல் என்ன கண்டு பிடித்திருக்கிறார்கள், எங்கெங்கு விநியோசம் செய்திருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, வெள்ளைப் பொன்னி ரகம் வழங்கப்படவில்லை. மற்றைய விதைகள் வழங்கப்படுகின்றன. ஆகவே, வெள்ளைப்பொன்னி ரகத்தினாலே மகசூல் சரியில்லையென்றால் அதற்கு இந்தத் துறை பொறுப்பில்லை.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளைப்பொன்னி நெல் இன்றைக்குப் பிரபலமாகப் பேசப்படுகிறது. ஆகவே வருகின்ற பருவத்திலாவது விவசாயிகளுக்குச் சப்ளை செய்வதற்கு அமைச்சர் முன்வருவாரா? அதோடு, தற்போது வழங்கக்கூடிய விதை நெல்கள் அரசுப் பண்ணைகளிலே தயாரிக்கப்படுகிறதா? அல்லது, தனியார் பண்ணைகள் மூலம் வாங்கி விற்கப்படுகிறதா? ஏனென்றால், சென்ற ஆண்டு விவசாயிகள் இந்த மாதிரி விதை நெல் வாங்கி முளைக்காமல் அல்லது சேதாரமாகி, பெரிய நட்டத்திற்கு உள்ளாகி இருக்கிறார்கள். ஆகவே. அமைச்சர் அவர்கள் அந்த விதைப் பொருள்கள் வழங்கக்கூடிய அந்த இலாகாவை, அந்த

ஆண்டு நேரடியாகக் கவனித்து, விவசாயிகளுக்குப் பாதுகாப்பு கொடுப்பதற்கும் என்ன, என்ன நெல் விதைகள் தற்போது வழங்கப்படுகின்றன என்பதையும் அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இப்பொழுது நம்முடைய விதைப் பண்ணைகளிலே தயாரிக்கப் படுகிற விதைகளை மட்டுமே வழங்கக்கூடிய அளவு நிலைமை இல்லை. தனியார் பண்ணைகளிலே தயாரிக்கப்படுகின்ற, சான்றிதழ்கள் பெற்ற விதைகள் வழங்கப்படுகின்றன. தேவைக் குரிய விதையை நாம் இன்னும் நிறைவு செய்ய முடியவில்லை. அதனால்தான் புதிதாக இரண்டு விதைப் பண்ணைகள் தொடங்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. அவைகள் தொடங்கப் பட்டதற்குப் பிறகு, இந்தப் பற்றாக்குறைகள் நீங்கும் என்று கருதுகிறேன்.

திரு. ந. குலசேகரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வெள்ளைப்பொன்னி நெல்லும் மற்றும் சில உயர்தர நெல்களும் சிங்கப்பூர் போன்ற நாடுகளிலே இருந்து கடத்தப்படுவதாகச் சொல்கிறார்களே, அதை அரசு அறியுமா? அது உண்மையாக இருக்குமானால், அரசு இறக்குமதி செய்து.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சிங்கப்பூரிலே விவசாயமே கிடையாது. டிரான்சிஸ்டரா என்ன, சிங்கப்பூரிலிருந்து வருவதற்கு.

கன்னியாகுமரி மாவட்டத்தில் நெல் பயிரிடும் இடங்களில் பயிரிடப்பட்டுள்ள ரப்பர் மரங்கள்.

*வினா எண் 536— திரு. டி. மணி திரு. ஜே. ஹேமச்சந்திரன் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் நெல் பயிரிடும் நிலங்களில் ரப்பர் பயிரிடப்படுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அடுத்துள்ள நிலங்களில் நெல் பயிரிடும் விவசாயிகள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளார்களா?

(இ) அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) ஆம். குறுகிய பரப் பளவில் அதாவது 38.87 ஹெக்டேரில் ரப்பர் பயிரிடப்படுகிறது.

(ஆ) ரப்பர் தோட்டத்தை அடுத்துள்ள நெல் வயல்களில் இங்கும் அங்குமாக ஓரளவு நிழலினாலும், வேர்களினாலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

(இ) மிகச் சிறிய பிரச்சனையாக இருப்பதாலும் இதன் மீது தனிப்பட்ட நடவடிக்கை எதுவும் தேவையில்லை என அரசு கருதுகிறது.